நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**முட்டை விலை ரூ.2.44**

First Published : 05 Jun 2011 11:06:04 AM IST

நாமக்கல், ஜூன் 4: நாமக்கல்லில் முட்டை விலை, ரூ.2.44 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது:

கடந்த 2 நாள்களாக முட்டை நுகர்வும், தேவையும் கணிசமான உயர்வைக் கண்டது. எனவே, சந்தை நிலவரத்தை கணக்கில் கொண்டு முட்டை விலையை 5 காசுகள் உயர்த்தி, 244 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வடமாநில வியாபாரிகளிடம் இருந்து, நாமக்கல்லுக்கு வரும் முட்டைக்கான ஆர்டர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. எனவே, ஒரு வாரத்துக்குள் மீண்டும் முட்டை விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

**துவரை சாகுபடி செயல் விளக்கம்**

First Published : 05 Jun 2011 12:07:27 PM IST

வேலூர், ஜூன் 4: நாட்டறம்பள்ளி வட்டத்தில் உள்ள கத்தாரி, தாசிரியப்பனூர் கிராமங்களில் காரீப் முன்பருவ முனைப்பு இயக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

அதிவிரைவு பயறு உற்பத்தி திட்டம் மூலம் துவரை செயல்விளக்கத் திடல் அமைக்க இடுபொருள்கள் மானியத்தில் வழங்கப்பட்டன.

வேலூர் வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) தமிழ்செல்வன் முகாமை தொடங்கி வைத்து உரையாற்றினார். முகாமில் விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

நாட்டறம்பள்ளி வேளாண்மை உதவி இயக்குநர் த. கணேசன், வேளாண்மை அலுவலர் ப. சரவணன், துணை வேளாண்மை அலுவலர் கோதண்டன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் மண் பரிசோதனை அவசியம் செய்ய வேண்டும்: வேளாண் உதவி இயக்குநர் வேண்டுகோள்**

First Published : 05 Jun 2011 09:29:50 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 4: மண் பரிசோதனை செய்துகொள்வது அவசியம் என்று திருநாவலூர் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திருநாவலூர் வட்டாரத்தில் தற்போது கோடை மானாவாரி சாகுபடிக்காக கோடை மழையை எதிர்நோக்கி விவசாயிகள் உள்ளனர். காரிப் பருவத்தில் இந்த வட்டாரத்தில் சுமார் 2000 ஹெக்டேர் பரப்பில் மானாவாரியாக கம்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மானாவாரி பயிர்களுக்கு மண் மாதிரி பரிசோதனை செய்து அதன்படி உரமிடுவது மிகவும் அவசியம்.

மனிதனுக்கு உடல் பரிசோதனை எவ்வளவு முக்கியமோ அதைப்போல நிலத்திற்கு மண் பரிசோதனை முக்கியம்.

சிக்கன முறையில் உரமிட்டு உரச்செலவை குறைத்திடவும், மண்நயம் அறிந்து அதற்கேற்ப நிலத்தை மேம்படுத்திடவும், மண்ணின் கலர்-உவர்-அமிலத் தன்மையை அறிந்திடவும், மண்ணில் உள்ள தழை, மணி, சாம்பல் சத்துக்களின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிடவும், பயிரின் தேவைக்கேற்ப உரமிட்டு மகசூலை அதிகரித்து அதிக லாபம் பெறவும் மண் பரிசோதனை அவசியமாகிறது.

பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பே மண் மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்திட வேண்டும். கோடைக் காலங்களில் பயிர் இல்லாத சமயங்களில் மண் மாதிரிகள் எடுப்பது மிகவும் சிறந்தது.

மண் மாதிரி எடுக்கும் வயலில் ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10 இடங்களில் வி வடிவத்தில் சுமார் முக்கால் அடி ஆழத்திற்கு குழி எடுத்து அதன் ஓரப்பகுதிகளிலிருந்து ஒரு அங்குல கனத்திற்கு மண் மாதிரிகளை சேகரிக்க வேண்டும்.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட மண்ணை சுத்தமான துணி அல்லது பாலிதீன் பேப்பர் பரப்பி நான்கு சம பாகங்களாகப் பிரித்து எதிர் பக்கங்களை ஒன்றாக சேகரித்து அதிலிருந்து 500 கிராம் அளவிற்கு மண் மாதிரி சேகரிக்கப்பட வேண்டும்.

மண் மாதிரியுடன் விவசாயின் பெயர், தந்தை பெயர், கிராமம், நிலத்தின் சர்வே எண், பாசன முறை, முன்னர் பயிரிட்ட பயிர், தற்போது பயிரிட உள்ள பயிர் ஆகிய விபரங்கள் குறிக்கப்பட வேண்டும்.

மண் மாதிரிகளை நேரடியாக விழுப்புரம் மண் பரிசோதனை நிலையத்திற்கோ அல்லது வேளாண்மை விரிவாக்க மையங்களிலோ ஒப்படைக்க விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒரு மண் மாதிரியினை ஆய்வு செய்ய ரூ. 10.00 அரசு கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும் என செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**10 ஆயிரம் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.42 கோடி பாக்கி**

First Published : 05 Jun 2011 09:34:56 AM IST

கடலூர்,ஜூன் 4: கடலூர் மாவட்டம் பெண்ணாடம் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்த 10 ஆயிரம் விவசாயிகளுக்கு, ரூ. 42 கோடி வரை ஆலை நிர்வாகம் பாக்கி வைத்து உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

கடலூர் மாவட்டக் கரும்பு விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் பயிர்க் கடனாக, கூட்டுறவு வங்கி ரூ. 30 கோடியும், வர்த்தக வங்கிகள் ரூ. 60 கோடியும் வழங்குகின்றன.

வட்டிக்குக் கடன் வாங்கி கரும்பு விளைவித்து, ஆலைக்கு சப்ளை செய்துவிட்டு, ஆலை உரிய நேரத்தில் பணம் வழங்காமல், இன்று நாளை என்று விவசாயிகளை இழுத்தடிக்கும் நிலை, கடலூர் மாவட்டத்தில் காலம் காலமாக நீடித்து வருகிறது.

4 சர்க்கரை ஆலைகள் கடலூர் மாவட்டத்தில் உள்ளன. பெண்ணாடம் சர்க்கரை ஆலை நாளொன்றுக்கு 7,500 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்டது. இந்த ஆலைக்கு 32 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் உள்ள கரும்பு பதிவு செய்யப்பட்டு உள்ளது. ஆலையில் கடந்த டிசம்பர் மாதம் தொடங்கப்பட்ட கரும்பு அரைவை, இன்னும் 10 நாள்களில் முடிவடைய இருக்கிறது.

இந்த அரைவைப் பருவத்தில் இதுவரை, 7.40 லட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டு உள்ளது. இறுதியாக 31-3-2011 அன்று எந்தெந்த நிலங்களில் முழுமையாகக் கரும்பு வெட்டு முடிவடைந்ததோ, அந்த விவசாயிகளுக்கு ஆலைநிர்வாகம் 11-5-2011 அன்று பணம் வழங்கி உள்ளது. ஆலைக்கு சப்ளை செய்யப்பட்ட சுமார் 2 லட்சம் டன் கரும்புக்கு, இதுவரை பணம் பட்டுவாடா செய்யவில்லையாம். சுமார் 10 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ. 42 கோடி வரை, இந்த சர்க்கரை ஆலை பாக்கி வைத்து இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

கரும்பு சப்ளை செய்யப்பட்ட நாளில் இருந்து 14 தினங்களுக்குள், விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் பணம் வழங்கிவிட வேண்டும்

என்று, சர்க்கரை கட்டுபாடுச் சட்டத்தில் (நன்ஞ்ஹழ்ஸ்ரீஹய்ங் இர்ய்ற்ழ்ர்ப்ங் அஸ்ரீற்) இருந்தும், பல விவசாயிகளுக்கு 70 நாள்கள் ஆகியும் பணம் வழங்கவில்லையாம்.

14 நாள்களுக்குள் கரும்புப் பணம் வழங்கா விட்டால், விவசாயிகளுக்கு வட்டியுடன் ஆலை நிர்வாகம், பாக்கித் தொகையை வழங்க வேண்டும் என்றும் சர்க்கரைக் கட்டுப்பாடு சட்டம் தெரிவிக்கிறது. அந்த வகையில் கரும்புப் பணம் பாக்கிக்காக, ஆலை நிர்வாகம் வழங்க வேண்டிய வட்டி மட்டும், ரூ. 86 லட்சம் என்கிறார்கள் விவசாயிகள்.

கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள், கடனை உரியகாலத்தில் திருப்பிச் செலுத்தினால், கடனுக்கு வட்டி இல்லை. பெண்ணாடம் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு சப்ளை செய்தவர்களுக்கு, ஆலை நிர்வாகம் உரிய காலத்தில் பணம் வழங்காததால், விவசாயிகள் கடனைத் திருப்பி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் அரசு அறிவித்து

இருக்கும் வட்டிச் சலுகையையும் விவசாயிகள் பெறமுடிய வில்லை. மேலும் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடனுக்கு, அபராத வட்டியாக 8.5 சதம் செலுத்த வேண்டிய பரிதாப நிலைக்கு, விவாசாயிகள் தள்ளப்பட்டு உள்ளனர்.

இதுகுறித்து வெலிங்டன் ஏரி பாசன விவசாயிகள் சங்கச் செயலாளர் பெண்ணாடம் சோமசுந்தரம் கூறுகையில், "பெண்ணாடம் சர்க்கரை ஆலை, கரும்பு விவசாயிகளுக்கு,

ரூ. 42 கோடி வரை பாக்கி வைத்து உள்ளது.

இதனால் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடனை, உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த முடியாமலும், அரசு அறிவித்து இருக்கும் வட்டிச் சலுகையைப் பெறமுடியாமலும் உள்ளனர்.

மே மாதம் வெட்டிய 1.38 லட்சம் டன் கரும்புக்கு, டன்னுக்கு ரூ. 250 வீதம் வழங்க வேண்டிய வெட்டுக் கூலி கூட ஆலை நிர்வாகம் வழங்க வில்லை. கடனை திருப்பிச் செலுத்தாததால், விவசாயிகளுக்கு புதிய பயிர்க் கடன் வாங்க முடியவில்லை. கடலூர் மாவட்ட ஏனைய சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்குப் பாக்கியின்றி பணம் வழங்கி விட்டன.

கரும்புப் பணம் பாக்கி குறித்து, மாவட்ட ஆட்சியர், வருவாய் மீட்பு சட்டத்தில் நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுக்குப் பணம் பெற்றுத் தரவேண்டும்.

ஆனால் மாவட்ட ஆட்சியர், வேளாண் இணை இயக்குநர், சர்க்கரைத்துறை இயக்குநர் உள்ளிட்டோருக்குக் கோரிக்கை மனு அளித்தும், நடவடிக்கை இல்லை என்றார்.

இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் இளங்கோவனிடம் கேட்டதற்கு, பெண்ணாடம் சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்புப் பணம் பாக்கி குறித்து, ஆலை நிர்வாகத்துடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். அடுத்த வாரம் மாவட்ட ஆட்சியர் மூலம், முத்தரப்புக் கூட்டத்தை கூட்ட முடிவு செய்து இருக்கிறோம். தேதி இன்னும் முடிவாகவில்லை என்றார்.

தினமலர்

## முட்டை விலை ஒரே நாளில் 5 பைசா அதிகரிப்பு

ஜூன் 06,2011,13:07



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டைவிலை ஒரே நாளில் 5 காசுகள் அதிகரித்து 244 காசுகளாக உயர்ந்து உள்ளது. நாமக்கல் மண்டலத்தில் முட்டையின் கொள்முதல் விலை கடந்த 3 தினங்களுக்கு முன்பு 239 காசுகளாக இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை விலை 244 காசுகளாக உயர்ந்து உள்ளது.

## கடந்த ஐந்து மாதங்களில் காபி ஏற்றுமதி 42 சதவீதம் உயர்வு

ஜூன் 06,2011,00:17



பெங்களூரு:நடப்பாண்டு ஜனவரி முதல் மே மாதம் வரையிலான ஐந்து மாதங்களில், காபி ஏற்றுமதி 42.51 சதவீதம் உயர்ந்து, 1.81 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில் இது 1.27 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது.இந்தியாவில் உற்பத்தியாகும் காபி வகைகள், ”வையிலும், நறுமணத்திலும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. இதனால், இந்திய காபி ரகங்களுக்கு வெளிநாடுகளில் கிராக்கி அதிகரித்துள்ளது. நம் நாட்டில் இருந்து அராபிகா, ரோபஸ்டா காபி ரகங்கள் இத்தாலி, ஜெர்மனி, பெல்ஜியம், ரஷ்ய கூட்டமைப்பு நாடுகள், ஸ்பெயின் நாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதியாகின்றன.

நடப்பு 2010 -11 காபி பருவத்தில் (அக்டோபர் - செப்டம்பர்), காபி ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரிக்கும் என காபி வாரியம் மதிப்பிட்டுள்ளது. சென்ற மே மாதம் வரையிலான 10 மாத காலத்தில், நாட்டின் காபி ஏற்றுமதி, 2.47 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டு இதே காலத்தில், 1.71 லட்சம் டன்னாக இருந்தது.ஏற்றுமதி செய்யப்பட்ட காபியின் மதிப்பு 1,750 கோடி ரூபாயில் இருந்து, 3,287 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. டாலர் மதிப்பில் இது 36.5 கோடி டாலரில் இருந்து, 71.7 கோடி டாலராக அதிகரித்துள்ளது. இதேபோல், ஒரு டன் காபி விலை சராசரியாக, ஒரு லட்சத்து 1,000 ரூபாயில் இருந்து, ஒரு லட்சத்து 32 ஆயிரம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

நடப்பாண்டு ஜனவரி முதல் மே வரையிலான ஐந்து மாத காலத்தில், காபி ஏற்றுமதி 42.51 சதவீதம் உயர்ந்து, 1.81 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு இதே காலத்தில், இது 1.27 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது. ஏற்றுமதி மதிப்பின் அடிப்படையில், இரு மடங்காக உயர்ந்து, 1,275 கோடி ரூபாயில் இருந்து, 2,547 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, டாலர் மதிப்பில் 108 சதவீதம் உயர்ந்து, 26.90 கோடி டாலரில் இருந்து 56 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், ஒரு டன் காபி விலை சராசரியாக, ஒரு லட்சம் ரூபாயில் இருந்து, ஒரு லட்சத்து 41 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது.

காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின் படி, சென்ற மே மாதம் வரையிலான ஐந்து மாத காலத்தில், அராபிகா பார்ச்மென்ட் காபி ஏற்றுமதி 30 ஆயிரத்து 237 டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டு இதே காலத்தில், 19 ஆயிரத்து 193 டன்னாக இருந்தது. இதே காலத்தில், அரபிகா செரி ரக காபி ஏற்றுமதி 6,827 டன்னில் இருந்து, 7,476 டன்னாக

உயர்ந்துள்ளது.ரோபஸ்டா பார்ச்மென்ட் காபி ஏற்றுமதி 11 ஆயிரத்து 58 டன்னில் இருந்து, 13 ஆயிரத்து 657 டன்னாக அதிகரித்துள்ளது. ரோபஸ்டா செரி காபி ஏற்றுமதி 56 ஆயிரத்து 847 டன்னில் இருந்து, 87 ஆயிரத்து 493 டன்னாக உயர்ந்துள்ளது. இன்ஸ்டன்ட் காபி வகைகளின் மொத்த ஏற்றுமதி 11 ஆயிரத்து 798 டன்னில் இருந்து, 21 ஆயிரத்து 288 டன்னாக அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்து, மதிப்பு கூட்டப்பட்ட இன்ஸ்டன்ட் காபி ஏற்றுமதி 21 ஆயிரத்து 5 டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 21 ஆயிரத்து 288 டன்னாக இருந்தது.ஏற்றுமதி அதிகரித்துள்ள போதிலும், கடந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் தொடர்ந்து பெய்த மழையால் காபி பயிர் பாதிக்கப்பட்டுள்ளதால், நடப்பு காபி பருவத்தில் உற்பத்தி குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நடப்பு காபி பருவத்தில் உற்பத்தி 3 லட்சத்து 8,000 டன்னாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது, மறுமதிப்பீட்டில் 3 சதவீதம் (9,000 டன்) குறைந்து, 2 லட்சத்து 99 ஆயிரம் கோடி டன் என்ற அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நடப்பு காபி பருவத்தில், உற்பத்தி 16 ஆயிரத்து 500 டன்னாக இருக்கும் என்று முன்பு மதிப்பிடப்பட்டிருந்தது. இது, தற்போது 16 ஆயிரத்து 475 டன்னாக குறையும் என்று மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,03:30 IST

சரவணம்பட்டி: கறவை மாடுகளை பராமரிப்பு குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு நாளை துவங்குகிறது. விவசாயத்துடன் உப தொழிலாளாக கால்நடை வளர்ப்பை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் இவற்றை பராமரிப்பது, அதிக பால் உற்பத்தி செய்வது, நோய் வராமல் தடுக்கும் முறைகள், தடுப்பூசி, சரிவிகித தீவனம் அளித்தல் போன்றவை பற்றிய விழிப்புணர்வு போதுமான அளவில் இல்லை. விவசாயிகள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு கால்நடை பல்கலையின் ஆராய்ச்சி மையம், இரண்டு நாள் பயிற்சி முகாமை நடத்துகிறது. நாளை துவங்கும் இந்த பயிற்சி முகாமி பங்÷ற்க கட்டணம் இல்லை. கோவை, சரவணம்பட்டி - காளப்பட்டியில் உள்ள மையத்தில் வகுப்புகள் நடக்கின்றன. ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணையாளர்கள், 0422 - 266 9965 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயரை பதிவு செய்து

கொள்ள லாம். இத்தகவலை, மையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் சிவக்குமார் தெரிவித்துள்ளார்.

**குறுவை சாகுபடிக்கு தேவையான விதைநெல் இருப்பு: வேளாண் உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,04:05 IST

திருத்துறைப்பூண்டி: "குறுவை சாகுபடிக்கு தேவையான விதைநெல் மானிய விலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும், விவசாய டெப்போ, தனியார் கடைகளில் விநியோகம் செய்யப்படுவதாகவும்' உதவி வேளாண் இயக்குனர் நடேசன் அறிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:
நடப்பாண்டு திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் 9,000 ஏக்கரில் குறுவை சாகுபடி, செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 7,000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி (ஒற்றை நாற்று) இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆடுதுறை 45, 43, 36 ஆகிய இனங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆடுதுறை 45 இனம் 7 டன், ஆடுதுறை43 இனம் 20 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோவுக்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகளை, மானிய விலையில் பெற்றிட தங்கள் வேளாண்மை உதவி அலுவலரின் பரிந்துரை பெற்று பயன்பெறுவதோடு, திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் இதன் விபரங்களை உடனடியாக தங்கள் பகுதி வேளாண் உதவி அலுவலகரிடம் பதிவு செய்ய வேண்டும். குறுவை நெற்பயிர் தாக்கக்கூடிய நோய் கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்து, விதைப்பது அவசியமாகும். இதற்கு தேவையான விதை நேர்த்தி மருந்து, சூடோ மோனோ புளோரசன்ட் 50 சதவீத மானிய விலையில் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்புவைக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்கள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,03:53 IST

கிருஷ்ணகிரி: காவேரிப்பட்டணம் அடுத்த சப்பாணிப்பட்டியில், தமிழ்நாடு தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்கள் சங்க மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் பெரியண்ணன் தலைமை வகித்தார். தர்மபுரி மாவட்ட தலைவர் ராமமூர்த்தி முன்னிலை வகித்தார். மாநில இளைஞர் அணி தலைவர் சதாசிவன் வரவேற்றார். மாநில தலைவர் கிருஷ்ணன் தீர்மானங்கள் குறித்து பேசினார். தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள ஜெயலலிதாவுக்கு வாழ்த்து தெரிவிப்பது, தமிழகத்தில் விவசாயிகளுக்கு, அரசு வழங்கும் மானியங்களை இடுபொருட்களாக வழங்காமல், பணமாக வழங்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அகில இந்திய மாங்கனி

கண்காட்சியை, மே மாத இறுதியில் நடத்த வேண்டும். கண்காட்சியில், மா உற்பத்தி மற்றும் உபபொருட்கள் உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கும் வகையில் ஸ்டால்கள் அமைக்க வேண்டும், என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட துணை தலைவர் திம்மராயன், தர்மபுரி மாவட்ட துணை தலைவர் மணி, ஈரோடு மாவட்ட தலைவர் மற்றொரு மணி, சேலம் மாவட்ட தலைவர் சம்பத் உள்பட பலர் கலந்து கொண்டனர். சேலம் மாவட்ட இளைஞர் அணி தலைவர் சக்திவேல் நன்றி கூறினார்.

**பவானிசாகருக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,04:10 IST

சத்தியமங்கலம்: நீலகிரி மலைப்பகுதியில் தொடர் மழையால் பவானி சாகர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.
சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானி சாகர் அணை. இந்த அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் நீர் வரத்தின் ஆதாரமாக விளங்குகிறது. இந்த அணையில் இருந்து கடந்த டிசம்பர் மாதம் பாசனத்துக்காக கீழ்பவானி வாய்காலில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதே சமயம் அணைக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்தது. இதனால், அணையின் நீர் மட்டம் கீழ் நோக்கிச் சென்றது. பவானிசாகர் அணையில் இருந்த 105 அடியில் தண்ணீரில் இருந்து 60 அடியாக தண்ணீர் குறைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர். இதைத்தொடர்ந்து, பவானிசாகர் அணைக்கு அவ்வப்போது பெய்த மழையால், சிறிதளவு நீர் வரத்துவங்கியது. கடந்த நான்கு நாட்களாக நீலகிரி மற்றும் கூடலூர் மலைப்பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால், பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை எட்டு மணிக்கு பவானி சாகர் அணைக்கு விநாடிக்கு ஒன்பதாயிரத்து 200 கனஅடி தண்ணீர் வந்தது. அணையின் நீர் மட்டம் 69.15 அடியாக இருந்தது. மாலை நான்கு மணிக்கு தண்ணீர் வரத்து பத்தாயிரத்து 100 கனஅடியாக அதிகரித்தது. இதனால், அணையின் நீர் மட்டமும் 69.55 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து கீழ்பவானி வாய்கால் மூலம் விநாடிக்கு ஐந்து கனஅடி தண்ணீரும், பவானி ஆற்றில் விநாடிக்கு 900 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளது. தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**வெங்காயம் அறுவடை நிறைவால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2011,01:14 IST

தாராபுரம்: தாராபுரத்தில் வெங்காயம் அறுவடை முடிந்ததால் சிறிய வெங்காயத்தின் விலை இரு நாட்களிலேயே 35 ரூபாயாக உயர்ந்துள்ளது.தாராபுரம், தொப்பம்பட்டி, பொன்னாபுரம், கோவிந்தாபுரம், தாசநாயக்கன்பட்டி, குண்டடம், கெத்தல்ரேவ் உள்பட பல்வேறு கிராமங்களில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் சிறிய வெங்காயம் பயிராகிறது.அறுவடையாகும் வெங்காயத்தை விவசாயிகள் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்கின்றனர்.பெரு வியாபாரிகள் இந்தியா முழுவதும் வியாபார தொடர்பு வைத்துள்ளதால், பிற மாநிலங்களில் சிறிய வெங்காயம் மலிவாக கிடைத்தால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு இறக்குமதி செய்து, உள்ளூர் வெங்காயத்துக்கு விலை கிடைக்காமல் செய்கின்றனர்.தற்போது, அறுவடை முடிந்துள்ள நிலையில், இரு நாட்களுக்கு முன் ஒரு கிலோ வெங்காயம் 15 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது, ஒரு கிலோ 35 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.ஒரு சில விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை தரம் பிரித்து, அடர்த்தியாக உள்ள வெங்காயத்தை காய வைத்து, அட்டி அமைத்து இருப்பு வைக்கின்றனர். தேவை அதிகரித்து, விலை அதிகரித்தால் வெங்காயத்தை விற்க முடிவு செய்துள்ளனர். அடுத்த 20 நாட்களில் மைசூரு வெங்காயம் வந்தால், சிறிய வெங்காயம் விலை குறைய வாய்ப்புள்ளது.

**வயல்வெளி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2011,23:03 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் அடுத்த ஆலடி கிராமத்தில் ஒட்டுண்ணி குளவி கொண்டு பப்பாளி மாவு பூச்சிகளை கட்டுபடுத்துதல் குறித்து வயல்வெளி செயல் விளக்கம் நடந்தது. விருத்தாசலம் வேளாண் பல்கலைக் கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடந்த நிகழ்சியில் விஞ்ஞானி இந்திராகாந்தி ஒட்டுண்ணி குளவிகள் எவ்வாறு மாவு பூச்சிகளை அழிக்கிறது, ஒட்டுண்ணியின் முட்டையிடும் திறன், வாழ்க்கை சுழற்சி, ஆயுட்காலம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். பின்னர் செயல் விளக்கமும் செய்து காட்டப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர்கள், விவசாயிகள் பங்கேற்றனர்.

**தென்னையில் கருந்தலை புழு தாக்கு கட்டுப்படுத்த ஒட்டுண்ணி முறை**

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2011,01:33 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதி விளை நிலங்களில் வளர்க்கப்படும் தென்னையில் ஏற்பட்டுள்ள கருந்தலை புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த, வேளாண் துறை மூலம் ஒட்டுண்ணி விடப்படுகிறது.ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரம் பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில், தற்போது தென்னையில் கருந்தலை புழுக்கள் தாக்கம் அதிகளவில் காணப்படுகிறது.அதனால், தென்னை மட்டைகள் கருகியும், தேங்காய் உற்பத்தி குறையும் சூழல் உருவாகியுள்ளது. ஆத்தூர் வேளாண்த்துறை அலுவலர்கள், தென்னையில் தாக்கி வரும் கருந்தலை புழுக்களை கட்டுப்படுத்தும் வகையில் "பிரகானிட்' எனும் ஒட்டுண்ணிகளை விட்டு வருகின்றனர்.இவ்வகை ஒட்டுண்ணிகளை மரத்தின் உச்சியில் உள்ள மட்டைகளில் விடப்படுகிறது. அதேபோல், ஆத்தூர், மல்லியக்கரை, ஈச்சம்பட்டி பகுதியில் நோய் தாக்கத்துக்குள்ளான தென்னை மரங்களில், வேளாண் அலுவலர்கள் ஒட்டுண்ணிகளை விடும் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.இதில், வேளாண்மை உதவி இயக்குனர் சக்கரவர்த்தி, வேளாண்மை அலுவலர் சித்ரா, உதவி வேளாண் அலுவலர் லலிதா உள்பட பலர் உடனிருந்தனர்.

**ஜூன் 16 முதல் மக்காச்சோளம்விற்பனை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2011,01:31 IST

கெங்கவல்லி: கெங்கவல்லி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வரும் 16ம் தேதி முதல் மக்காச்சோளம், எள் விற்பனை துவங்கவுள்ளது.கெங்கவல்லி அருகே ஒதியத்தூர் பிரிவு சாலையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடம் செயல்பட்டு வருகிறது. அதில், விவசாயிகள் விளைவித்த மக்காச்சோளம், எள் ஆகியவற்றை முறைமுக ஏலம் இல்லாமல், போட்டி ஏலத்தின் மூலம் வியாபாரிகளிடம் நேரடியாக விற்பனை செய்யப்படுகிறது.மேலும், விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் விற்பனை செய்யும் பொருட்களுக்கு கமிஷன் தொகை வசூல் செய்வது கிடையாது. அதன்படி, வரும் 16ம் தேதி காலை 11 மணியளவில், மக்காச்சோளம், எள் விற்பனை துவங்கவுள்ளது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்பனையாகாமல் குடோனில் ஸ்டாக் வைக்கும் மக்காச்சோளம், எள் ஆகியவற்றுக்கு மார்க்கெட் விலையில், 50 சதவீதத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வரை கடன் தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.கடன் வாங்கும் தொகைக்கு விவசாயிகளிடம் ஒரு சதவீதம்

வட்டி வசூல் செய்யப்படுகிறது என, ஒழுங்குமுறை விற்பனை கூட அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ.2,500 வழங்கணும்:தஞ்சை காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூன் 05,2011,01:24 IST

கும்பகோணம்: "கரும்பு டன்னுக்கு 2,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.சங்கத்தின் மாவட்ட தலைவர் பிரகாசம், செயலாளர் சுவாமிமலை விமலநாதன் ஆகியோர் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் உள்ளதாவது:தேர்தல் வாக்குறுதியில் கூறப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருவதற்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்படுகிறது.காவிரி டெல்டா மாவட்டங்களில் தேர்தல் பிரசாரத்திற்கு வந்த போது, கும்பகோணம் பிரசார கூட்டத்தில் "விவசாயிகளின் நலன் கருதி கரும்பு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாயும், நெல்லுக்கு உரிய விலையும் இடைக்க அ.தி.மு.க,. தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.கடந்த 2007 நவம்பரில் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள், தமிழக நெல் உற்பத்தியாளர் பேரவையினரும், டெல்லியில் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,500 ரூபாய் விலை கோரி பார்லிமென்ட் முன் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணி நடந்தது. கடந்த 4 ஆண்டுகளாக உயர்ந்துள்ள விலைவாசி, இடுபொருள் மற்றும் விவசாயக்கூலி உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், மத்திய அரசின் வேளாண் ஆணையத்தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவரண்களின் கணக்கீடு மற்றும் பரிந்துரையை அடிப்படையாக கொண்டால் நெல் குவிண்டால் . 2000 ஆயிரம் ரூபாய் விலை கிடைத்தால் மட்டுமே தற்போது விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையாக இருக்கும்.எனவே, மத்திய அரசு நெல்லிற்கு உரிய விலையை ர்ணயம் செய்யும்வரை, தமிழக நெல் விவசாயிகள் நலன் கருதி இடைக்கால ஏற்பாடாக ஊக்கத்தொகை மற்றும் இடைகழ் செலவு ஆகியவற்றிற்கு நெல் குவிண்டால் 1,500 ரூபாய் கிடைக்க உத்தரவிட வேண்டும். கரும்பிற்கு அரசு அறிவிக்கின்ற விலையை தனியார் சர்க்கரை ஆலைகள் தர முன்வராவிட்டால் அந்த தனியார் சர்க்கரை ஆலையை தமிழக அரசே கையகப்படுத்தி அரசு ஆலையாக அறிவித்து நடத்திட வேண்டும் .இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோதுமை உற்பத்தி 18% உயர்வு**

ஜூன் 05,2011,16:36



புதுடில்லி : நாட்டின் கோதுமை உற்பத்தி 18 சதவீதம் அதிகரித்துள்ளது. முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு 26.43 மீல்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டு, புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்தில் 22.41 மில்லியன் டன் கோதுமை மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டதாக இந்திய உணவு உற்பத்தி கழகம் தெரிவித்துள்ளது. 2011-12ம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மாதத்தில் 84.27 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக பஞ்சாப் மாநிலத்தில் 10.92 மில்லியன் டன்னும், அரியானாவில் 6.87 மில்லியன் டன்னும் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் முறையே 4.81 மில்லியன் டன், 2.42 மில்லியன் டன், 1.11 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்யபப்பட்டுள்ளது.

**ரப்பர் விலை உயர வாய்ப்பு**

ஜூன் 05,2011,13:54



புதுடில்லி : கேரளாவில் பருவமழை தாமதமாக துவங்கி உள்ளதால் இம்மாதம் இயற்கை ரப்பரின் விலை கிலோவிற்கு ரூ.10 வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஒரு கிலோ இயற்கை ரப்பர் ரூ.226 ஆக உள்ளது. இனி வரும் காலங்களில் இது ரூ.235 ஆக உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையான பாங்காங்கில் ரப்பர் விலை லோவிற்கு ரூ.234.72 ஆக உள்ளது. மழை காரணமாக தாய்லாந்திற்கு ஏற்றுமதி செய்யப்படும் ரப்பரின் அளவும் குறைந்ததே இந்த விலை ஏற்றத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஜூலையில் பணவீக்கம் குறையும்:பொருளாதார கழகம்**

ஜூன் 05,2011,11:24



புதுடில்லி :ஜூலை மாத இறுதிக்குள் இந்தியாவின் பணவீக்கம் 7.93 சதவீதத்தை எட்டும் என பொருளாதார வளர்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. மொத்த விற்பனை சந்தையில் மே மாதம் 8.47 சதவீதமாகவும், ஜூன் மாதம் 8.24 சதவீதமாகவும் இருந்த நாட்டின் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 7.93 சதவீதமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் தொழிற்துறை வளர்ச்சி விகிதம் 4.84 சதவீதம் வரை குறைந்து வருவதாக இந்திய தொழில் உற்பத்தி கழகம் தெரிவித்துள்ளது.

**கொப்பரை வரத்து இல்லாததால் விலையிலும் மாற்றம் இல்லை**

ஜூன் 05,2011,09:47



பொள்ளாச்சி : வெளிமார்க்கெட்டில் கொப்பரை வரத்து அதிகரிக்காமலும், விலை உயராமலும் உள்ளதால் மார்க்கெட் மந்த நிலையில் உள்ளது.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த 28ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 64 - 66 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. தேங்காய் பவுடர் கிலோவுக்கு 110 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,415 - 1,420 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு (மட்டை தவிர) 16,500 - 17,000 ரூபாய் வரையிலும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. சென்னை உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு உணவு தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 16,000 ரூபாய் விலை கிடைத்தது.விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய் ஒன்றுக்கு 10.50 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்ள 8.50 - 9.15 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது.

நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 64 - 66.50 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,430 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 98 ரூபாயும் விலை கிடைத்தது. விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து உரித்து வைத்திருக்கும் தேங்காய் டன்னுக்கு 17,500 - 18,000 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. சென்னை உள்ளிட்ட பிற பகுதிகளுக்கு உணவுத்தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய் டன்னுக்கு 16,500 ரூபாய் விலை கொடுக்கப்பட்டது. விவசாயிகள் சொந்த பொறுப்பில் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு 10.50 ரூபாயும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 9.50 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், 'கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை வரத்தும் அதிகரிக்கவில்லை, கொப்பரை விலையும் உயரவில்லை. கடந்த வாரத்தில் இருந்து வியாபாரிகளும், இடைத்தரகர்களும் 'சிண்டிக்கேட்' அமைத்துள்ளதால் கொப்பரை விலை உயராமல் உள்ளது. இந்நிலையில், கோடை மழை சீசன் துவங்கியுள்ளது. மழையால் இந்த வாரம்

எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. மழை தொடர்ந்தால் அடுத்த வாரத்தில் கொப்பரை உற்பத்தி பாதிக்கும். அதனால் கொப்பரை விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்றனர்.

**நாட்டின் வேளாண் உற்பத்தி 6.6 சதவீதம் உயர்வு**

ஜூன் 05,2011,04:25



புதுடில்லி:நாட்டின் வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளின் வளர்ச்சி, சென்ற 2010-11ம் நிதியாண்டில், மதிப்பீடுகளை விஞ்சி,6.6 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது,முந்தைய நிதியாண்டில், 0.4 சதவீதம் என்ற அளவில், மிகவும் குறைவாக இருந்தது.சென்ற நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி அதிகரித்ததற்கு முக்கிய காரணம், உணவு தானியங்கள் உற்பத்தி, 23.59 கோடி டன்னாக உயர்ந்ததுதான். மத்திய அரசு, சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி, 5.4 சதவீதம் என்ற அளவில்தான் இருக்கும் என மதிப்பீடு செய்திருந்தது. ஆனால், மூன்றாவது மதிப்பீட்டையும் விஞ்சி, உற்பத்தி மேம்பட்டுள்ளது. குறிப்பாக, கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் போன்றவற்றின் உற்பத்தி, அரசின் இரண்டாவது மதிப்பீட்டை விட உயர்ந்துள்ளது.வேளாண் உற்பத்தி மட்டுமின்றி, வனம் மற்றும் மீன் வளமும் சிறப்பான அளவில் மேம்பட்டிருந்தது.பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழுவின் தலைவர் சி.ரங்கராஜன் இது குறித்து கூறுகையில், 'நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி வளர்ச்சி, சென்ற ஆண்டு இருந்த அளவிற்கு இருக்காது' என்று தெரிவித்தார்.நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் துறையின் பங்க ளிப்பு, சென்ற நிதியாண்டின் நான்காவது காலாண்டில், 7.5 சதவீதமாக இருந்தது. இது, முந்தைய நிதியாண்டின், இதே காலாண்டில், 1.1 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைவாக

இருந்தது.சென்ற 2010-11ம் வேளாண் பருவத்தில் (ஜூலை - ஜூன்), உணவு தானியங்கள் உற்பத்தி, 23.59 கோடி டன்னாக இருக்கும் என, மூன்றாவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், முந்தைய வேளாண் பருவத்தில், இவற்றின் உற்பத்தி, 21.81 கோடி டன்னாக இருந்தது. கடந்த 2008-09ம் வேளாண் பருவத்தில், மிகவும் அதிகபட்சமாக, உணவு தானியங்கள் உற்பத்தி, 23.45 கோடி டன்னாக இருந்தது. இதுவரை, இதுவே, சாதனை அளவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.கடந்த வேளாண் பருவத்தில், மொத்த உணவு தானியங்கள் உற்பத்தியில், கோதுமை உற்பத்தி 8.43 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி 1.73 கோடி டன்னாகவும், எண்ணெய் வித்துகள் உற்பத்தி 3.03 கோடி டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3.39 கோடி பொதிகள் (ஒரு பொதி 170 கிலோ) என்ற அளவிலும் இருந்தது.சென்ற நிதியாண்டில் மத்திய அரசு, வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், பல் வேறு நடவடிக் கைகளை மேற்கொண்டது. மேலும், பருவ நிலையும் சாதகமாக இருந்ததால், தானியங்கள் உற்பத்தி மதிப்பீடுகளை விஞ்சி அதிகரித்துள்ளது.அதேசமயம், 2009-10ம் நிதியாண்டில், நாட்டின் பல மாநிலங் களில், வறட்சி நிலை ஏற்பட்டதால், அவ்வாண்டில், தானியங்கள் உற்பத்தி, 1.60 லட்சம் டன் குறைந் திருந்தது. தற்போதைய நிலையில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண்துறையின் பங்களிப்பு 15 சதவீதம் என்ற அளவில் உள்ளது. ஆனால், நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 60 சதவீதத்தினர், வேளாண் மற்றும் அது சார்ந்த துறைகளையே சார்ந்தே உள்ளனர்.

**பருப்பு, சர்க்கரை குறைந்தது பொரி கடலை விலை உயர்வு**

ஜூன் 05,2011,04:19



விருதுநகர்: விருது நகர் மார்க்கெட்டில் துவரம் பருப்பு விலை மூடைக்கு ரூ.100 , பாசிப்பருப்பு ரூ.800 குறைந்துள் ளது. பொரிகடலை மூடைக்கு ரூ.50, கொண்டக்கடலை மூடைக்கு 150 ரூபாய் உயர்ந்துள்ளது. விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 2785 லிருந்து 2770 ஆக குறைந்துள்ளது.

கடலெண்ணெய் டின்னுக்கு 1380 ஆக உயர்ந்துள்ளது. சூரிய காந்தி எண்ணெய் 1170, பாமாயில் 945 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 4300 லிருந்து 4350 ஆகவும், கடலைப் புண்ணாக்கு மூடை 3000 ரூபாயிலிருந்து 2900 ஆகவும் குறைந்துள்ளது. உளுந்து மூடைக்கு 4900 லிருந்து 4800, சுமார் ரக உளுந்து 4100 லிருந்து 4900, பர்மா பருவட்டு உளுந்து 5100 லிருந்து 4900 ரூபாயாக உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6400 ஆகவும், பர்மா பருவட்டு பருப்பு 6200 ரூபாயாகவும் உள்ளது. துவரை 3800 லிருந்து 3600 ஆகவும், பொடி துவரை 3000 ஆக உள்ளது. துவரம் பருப்பு 5700 லிருந்து 5600 ஆக குறைந்துள்ளது.

பொடி துவரம் பருப்பு 4600 ரூபாயாக உள்ளது. பாசிப்பயறு 6400 ஆகவும், லயன் பருவட்டு 3900, சுமார் ரகம் 3700 ரூபாயாக உள்ளது. பாசிப்பருப்பு 5700 லிருந்து 5100, சுமார் ரகம் 5500 லிருந்து 4700 ரூபாயாக குறைந்துள்ளது. மைதா 2180, ரவை 2170லிருந்து 2180 ஆக உயர்ந்துள்ளது. கொண்டைக்கடலை 2700 லிருந்து 2850, பொரிகடலை 2080 லிருந்து 2130 ரூபாயாக உயர்ந்துள்ளது.

மிளகாய் புது வத்தல் 8400, சுமார் ரகம் 7500 லிருந்து 8000, முண்டு வத்தல் 7000 லிருந்து 7500 ஆக உள்ளது. சோடை வத்தல் 3200, பழைய சோடை வத்தல் 2400 ரூபாயாக உள்ளது. 'மிளகாய் வத்தல் விலையில் எந்த மாற்றமும் இல்லாமல், கடந்த வாரம் போன்றே உள்ளதாக,' வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *11 மாவட்டங்களின் பாசன தேவைக்காக மேட்டூர் அணை இன்று திறப்பு*

*மேட்டூர், ஜூன்.6–*
*தமிழகத்தில் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட 11 டெல்டா மாவட்டங்களின் பாசனத்தேவைக்காக ஆண்டுதோறும் ஜூன் 12–ந் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். நடப்பாண்டில் வழக்கத்திற்கு முன்னதாக ஜூன் 6–ந் தேதியே (இன்று) மேட்டூர் அணை திறக்கப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டது.*
*இதையொட்டி மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் வெளியேறும் பகுதி சீர்செய்யப்பட்டது. மேலும் அணை திறக்கப்படுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.*
*இன்று (திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் 10.30 மணிக்குள் மேட்டூர் அணை திறக்கப்படுகிறது. இதன் திறப்பு விழாவில் பொதுப்பணித் துறை அமைச்சர் ராமலிங்கம்,*

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் இடைப்பாடி பழனிச்சாமி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

தினகரன்

## விருதுநகர் மார்க்கெட்டில் பாசிப்பருப்பு மூட்டைக்கு 400 ரூபாய் சரிந்தது

பதிவு செய்த நாள் 6/5/2011 7:49:59 AM



விருதுநகர்: விருதுநகர் மார்க்கெட்டில், நேற்று பாசிப்பருப்பு மூட்டைக்கு ஸீ400 வரை குறைத்து விற்கப்பட்டது. கடலைப்பருப்பு விலை மூட்டைக்கு ஸீ100 உயர்ந்துள்ள நிலையில், கடலை எண்ணெய் டின்னுக்கு ஸீ10 குறைந்துள்ளது.

பாசிப்பருப்பு வரத்து அதிகரிப்பு மற்றும் விற்பனை மந்தம் காரணமாக (100 கிலோ) மூட்டைக்கு ஸீ400 வரை விலை சரிந்துள்ளது. தஞ்சை பயறு ஸீ4000 லிருந்து ஸீ3600 ஆகவும், நாடு பயறு ஸீ3900 லிருந்து ஸீ3500 ஆகவும் குறைந்துள்ளது. பாசிப்பருப்பு நாடு ஸீ5400 லிருந்து ஸீ5000, தஞ்சை பருப்பு ஸீ5000 லிருந்து ஸீ4600 ஆகவும் விலை குறைந்துள்ளது.

கடலை பருப்பு (80 கிலோ) ஸீ4200 லிருந்து ஸீ4300 என விலை உயர்ந்துள்ள நிலையில், எண்ணெய் விற்பனை மந்தமாக இருப்பதால், கடலை எண்ணெய் (15 கிலோ) டின் ஸீ1425 லிருந்து ஸீ1415 ஆக குறைந்துள்ளது.

வத்தல் வரத்து குறைந்து, சீசன் முடியும் நிலை என்பதால், தரமற்ற வத்தல்கள் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. ஆந்திரா குண்டூர் வத்தல் மார்க்கெட் கோடை விடுமுறைக்காக, கடந்த மாதம் மூடப்பட்டது. விருதுநகர் வத்தல் மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் 800 மூட்டை வத்தல் மட்டுமே வந்துள்ளது. தரம் குறைந்த சம்பா வத்தல், குவிண்டால் ஸீ7000 முதல் ஸீ7500 வரை, தரமான வத்தல் ஸீ7500 முதல் ஸீ8500 வரை விற்பனையாகிறது. பள்ளி, கல்லு ரி கட்டணம் காரணமாக, அனைத்து பொருள்களின் விற்பனை மந்தமாக இருப்பதால் பருப்பு, எண்ணெய் விலை கடந்த வார விலை நிலவரத்திலேயே உள்ளன.

## ஏற்றுமதி தடை நீக்கம்

பதிவு செய்த நாள் 6/6/2011 12:37:43 AM



புதுடெல்லி: வேதியியல் உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை, தானியங்கள் மற்றும் உணவு எண்ணெய் ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு நீக்கியுள்ளது. இயற்கை உரங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை, தானியங்கள், உணவு எண்ணெய் ஆகியவற்றை ஆண்டுக்கு தலா 10,000 டன் வரை ஏற்றுமதி செய்ய சர்வதேச வர்த்தக பொது இயக்குனரகம் (டிஜிஎப்டி) அனுமதித்துள்ளது. மேலும், இயற்கை உரங்கள் மூலம் உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்வதை ஊக்குவித்து வருவதுடன், அப்பொருட்களின் ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு நீக்கியுள்ளது.

## கோதுமை கொள்முதல் அரசு புதிய சாதனை

பதிவு செய்த நாள் 6/6/2011 12:40:02 AM



புதுடெல்லி : மத்திய அரசின் உணவு கழகம் (எப்சிஐ), ஏப்ரல்&ஜுன் சீசனில் இதுவரை 2.64 கோடி டன் கோதுமையை கொள்முதல் செய்து புதிய சாதனை படைத்துள்ளது. இது கடந்த ஆண்டின் 2.24 கோடி டன்னைவிட 18 சதவீதம் அதிகம். இதற்கு முன்பு கடந்த ஆண்டில் (ஏப்ரல் & மார்ச்) 2.53 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்ததே அதிகபட்சமாக இருந்தது. அந்த சாதனை இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த சந்தை ஆண்டில் 2.62 டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதை மிஞ்சி விட்டது.

## 100 டன் விதை மஞ்சள் ஏற்றுமதி

பதிவு செய்த நாள் 6/6/2011 12:40:40 AM



ஈரோடு : தமிழகத்தின் சத்தியமங்கலத்திலிருந்து 100 டன் விதை மஞ்சள், கிழக்காசிய நாடான கம்போடியாவுக்குஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கம்போடியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் கூறுகையில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சார்பில் பவானிசாகரில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் இணையதளத்தில் மஞ்சள் சாகுபடி பற்றிய விவரங்களை அறிந்தேன்.

இதன்படி, இந்தியாவுக்கு வந்து மண் பரிசோதனை செய்ததில், கம்போடியாவில் மஞ்சள் விளைவதற்கு சாதகமான சூழல் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். இதையடுத்து, ஒரு நிறுவனத்தை தொடங்கி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளேன். இதன்படி, விதை மஞ்சளை வேளாண் ஆராய்ச்சி மையம் கம்போடியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது என்றார்.

**கேரளாவில் இருந்து வரத்து அதிகரிப்பு மிளகு விலை குறைந்தது: கிலோ ரூ.300**

பதிவு செய்த நாள் 6/7/2011 1:27:08 AM



சேலம் : கேரளாவில் இருந்து மிளகு வரத்து அதிகரிக்க துவங்கி இருப்பதால் விலை குறைந்து வருகிறது. சேலத்தில் ஒரு கிலோ மிளகு ரூ.300க்கு விற்கப்படுகிறது. கேரள எஸ்டேட்களிலும், தமிழகத்தில் ஊட்டி, குன்னூர், ஏலகிரி, ஏற்காடு மலைப்பகுதி எஸ்டேட்களிலும் அதிகபடியான இடங்களில் மிளகு பயிரிடப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் நடப்பாண்டு மிளகு உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் கிலோ ரூ.200க்கு விற்கப்பட்ட மிளகு ரூ.350யை எட்டியது.

மேலும், வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அதிகளவு மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டதால் உள்ளூர் சந்தைகளில் விலை உயர்ந்தது. சேலம் செவ்வாய்பேட்டை மார்க்கெட்டுக்கு கேரளாவில் இருந்து அதிகப்படியான மிளகு விற்பனைக்கு வரும். இது கடந்த மாதம் அதிரடியாக குறைந்தது. இதனால் மே மாத துவக்கத்தில் ஒரு கிலோ மிளகு ரூ.250ல் இருந்து ரூ.300 ஆக உயர்ந்தது.

பின்னர் உயர்ந்து மே 20ம் தேதியில் அதிகபட்சமாக ஒரு கிலோ மிளகு ரூ.350க்கு விற்பனை செய்யப்பட்டது. 10 நாளில் ரூ.50 விலை உயர்ந்ததால் பொதுமக்கள் பாதிப்படைந்தனர். இந்நிலையில் தற்போது கேரள மிளகு வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. இதனால் விலையும் குறையத் துவங்கியுள்ளது. சேலம் சந்தையில் நேற்று ஒரு கிலோ மிளகு ரூ.300க்கு விற்கப்பட்டது. இன்னும் விலை குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக வியாபாரிகள் கூறுகையில், கேரள மிளகு வரத்து தற்போது அதிகரிக்க துவங்கியுள்ளது. அதனால் விலை குறைந்து வருகிறது. என்றனர்.

## பூக்கள் விலை வீழ்ச்சி கிலோ மல்லி 30 ரூபாய்

பதிவு செய்த நாள் 6/6/2011 12:41:29 AM



சத்தியமங்கலம் : சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்துள்ளதால் பூக்கள் விலை குறைந்துள்ளது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், பண்ணாரி, சிக்கரசம்பாளையம், புதுவடவள்ளி உள்ளிட்ட பகுதிகளில் மல்லிகை, முல்லை, ஜாதி முல்லை, கனகாம்பரம், செண்டுமல்லி, அரளி போன்ற பூ சாகுபடி அதிகளவில் நடைபெற்று வருகிறது.

தற்போது விளைச்சல் அதிகரித்து உள்ளதால் சத்தியமங்கலம் மார்க்கெட்டுக்கு தினமும் 5 முதல் 7 டன் வரை பூக்கள் விற்பனைக்கு வருகிறது. வெளி மாவட்ட மற்றும் வெளி மாநில வியாபாரிகள் சத்தியமங்கலம் மார்க்கெட்டுக்கு வந்து அதிகளவில் பூக்களை வாங்கிச் செல்கின்றனர். அதிக வரத்து காரணமாக பூக்கள் விலை சரிந்துள்ளது. மொத்த விற்பனையில் ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.30க்கும் முல்லை ரூ.20க்கும் ஜாதிமுல்லை ரூ.30க்கும் கனகாம்பரம் ரூ.40க்கும் செண்டுமல்லி ரூ.15க்கும் விற்பனை செய்யப்பட்டது.